**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வள அபிவிருத்தி நிறுவகம் - 2023**

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வள அபிவிருத்தி நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 18 ஆவது பிரின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1979 இன் 11 ஆம் இலக்க மனித வள அபிவிருத்தி நிறுவக விதப்புரையின் 23 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழக சட்டத்தின் 107(5) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும்

நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது உரிய சொத்து வகுப்பும் மீள்மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 04 சொத்து வகுப்புக்களின் மீள்மதிப்பீடு செய்யும் போது கிரயம் ரூபா 33,188,378 ஆன சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்வதற்கும் சரியாக வெளிப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்துக்கள் வகுப்பும் மீள்மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 13,632,566 ஆன பாடநெறி வருமானம் மற்றும் ரூபா 845,900 ஆன விண்ணப்பக் கட்டணம் ஆண்டின் வருமானமாக இனங்காணப் படாமல் முறையே நேரடியாக அபிவிருத்தி நிதியத்திற்கும் மற்றும் பிற்போட்ட வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 14,478,466 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த வருமானம் நிறுவகத்தில் தற்போது முடிவடைந்த பாடநெறிகளில் எஞ்சிய மீதியாக இருந்ததுடன் அந்தப் பாடநெறி நடாத்தப்பட்ட காலத்தின் போது அந்த பெறுமானம் கிடைத்த காலத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வருமானமாகவும் பிற்போட்ட வருமானமாகவும் இனங்காணப்பட்டிருந்தது. பாடநெறிக்குரிய காலப்பகுதி முடிவடைந்தமையினால் பாடநெறி பாதீட்டின் மூலம் சேமிக்கப்பட்ட தொகை பாடநெறி பாதீட்டுக் கொள்கையின் பிரகாரம் அபிவிருத்தி நிதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. | பதில் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. ஆண்டிற்குரிய வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | பாடநெறி வருமானத்தில் பிற்போட்ட வருமானமாக ஒதுக்கப்பட்ட ரூபா 105,547,615 இன் சரியான தன்மையினை பரீட்சிப்பதற்காக உரிய பாடநெறிகளின் காலப்பகுதிகளை உள்ளடக்கிய பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்தக் கணக்கீட்டு தொகுதி ஊடாக சுயமாக செயற்படுகின்றமையினால் ஆண்டின் இறுதியின் போது அந்த வருமானத் தலைப்புக்களில் நிதி பாடநெறி வருமானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. | கணக்காய்விற்கு தேவையான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு மீள் மதிப்பீடு செய்யப்பட்ட மீள் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 8,817,858 ஆன சொத்துக்களுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 3,294,944 பெறுமானத் தேய்வாக சீராக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் ஆதனங்கள், | இந்த சொத்துக்கள் 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அறிக்கையின் பின்னர் பெறுவனவாக இது கணனி முறைமையில் 2023.01.01 ஆந் திகதியே உள்ளடக்கப்பட்டிருந்தது. இதனால் 2023 ஆம் | சரியான பெறுமதியின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு சீராக்கம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறிகள் மற்றும் உபகரணங்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்கான பயன்தரு ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2016 முதல் 2022 வரை கிடைக்கப்பெற்ற கூட்டுமொத்தமான ரூபா 6,474,000 ஆன நூலகப் புத்தகங்கள் கடந்த ஆண்டின் போதும், மீளாய்வாண்டின் போதும் ''நூலக அபிவிருத்தி நிதியம்'' என்ற பெயரில் உள்ள நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதியம் ஸ்தாபிக்கப்பட்டதன் ஸ்தாபிக்கப்பட்டன் நோக்கம் மற்றும் அதன் நிதியை பயன் படுத்துகின்ற முறை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நூலக அபிவிருத்தி நிதிய முகாமைத்துவக் குழு அங்கீகாரத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்படு வதுடன் அதன் பயன்பாடு தொடர்பான விபரங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | ஊழியர் நலன்புரி மருத்துவ காப்புறுதிக்காக முற்கொடுப்பனவு ரூபா 374,917 தொகை மீளாய்வாண்டின் செலவினமாக செலுத்தப்படாதிருந்த ரூபா 124,458 பழைய மீதி வருமானத்திற்கு எடுக்கும் போது திரண்ட மிகையில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் மிகை ரூபா 250,459 இனாலும், திரண்ட மிகை ரூபா 124,458 இனாலும் மற்றும் முன்கொண்டு செல்லப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 374,917 இனாலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்துவரும் கணக்காண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் மீளாய்வாண்டிற்காக மீண்டெழும் மிகை ரூபா | அபிவிருத்தி நிதியத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றல்களுக்குரிய | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் சரியாக மிகைகளை |

| | | |
|---|---|---|
| 70,135,469 ஆக காண்பிக்க வேண்டிய போதிலும் மீண்டெழும் மிகை ரூபா 52,655,823 மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கான மாற்றல்கள் ரூபா 17,479,646 ஆக தனித்தனியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பாடநெறி வருமானத்தில் இருந்து செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனால் இந்த அபிவிருத்தி நிதியத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மாற்றல்கள் நிதிக் கூற்றுக்களில் மீண்டும் பாடநெறி வருமானத்தில் சேர்க்கப்பட்டு இலாபமாக காண்பிக்கப்பட்டு மீண்டும் மாற்றப்பட்டுள்ளது. | இனங்கண்டு மேற்கொள்ளல் வேண்டும். |

**1.6 பெற வேண்டிய பணம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் பிணைமுறிகளை மீறியதன் காரணமாக ஒரு உத்தியோகத்த ரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 17,427,523 மீதியொன்று மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிணைமுறி மீறியமையால் கிடைக்க வேண்டிய மீதி ரூபா 5.3 மில்லியன் தொகை இதுவரையிலும் தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதித் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அறவிட வேண்டிய பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | | **இணங்காமைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 394(இ) | ரூபா 730,395 கூட்டுத்தொகையான இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் 02 வருட காலம் வைப்பாக வைக்கப்பட்டுள்ளதுடன் 02 வருடங்களின் பின்னர் அது வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11(அ) பிரிவு | உரிய அமைச்சரினதும், நிதி அமைச்சரினதும் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 35,000,000 நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய இலக்கம் 2022/03 என்ற தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 03(viii) பிரிவு | தொடர்புடைய சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு முரணாக ஊழியர் நலன்புரித் திட்டமாக அமுல்படுத்தப்பட்டிருந்தது. சுகாதார காப்புறுதி திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 818,000 உழைக்கப்பட்ட நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | இந்த சுகாதார காப்புறுதி மேவுகைத் திட்டம் 2016 ஆம் ஆண்டில் இருந்து அமுல்படுத்தப்படுவதுடன் அதற்காக நிறுவனத்தின் சுய உழைப்பு நிதியத்தில் இருந்து நிதி மற்றும் முகாமைத்துவ குழு அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2023 சனவரி 18 ஆம் திகதிய இலக்கம் PD/HRD/126/214/19/2023 என்ற திறைசேரி செயலாளரினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட சுற்றறிக்கை கடிதத்தின் 5 ஆம் பந்தி | பிணை முறிகளை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட ரூபா 5,327,234 தொகை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 5/2023 சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய ஏழு வருட கற்கை விடுமுறை உரித்தான கல்விசார் பதவியணியினருக்கு உரித்தான விமானப் பணச்சீட்டு கட்டணத்திற்காக இந்த நிதியம் பயன் படுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2015 நவம்பர் 17 ஆம் திகதிய இலக்கம் 2015/15 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | ஊழியர் முகாமைத்துவ பட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற பரீட்சைகளின் பெறுபேறுகள் விநியோகிப்பதற்கு 05 மாதங்கள் முதல் 13 மாதங்கள் வரையிலான தாமதம் ஏற்பட்டிருந்த 06 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | விடைத் தாள்களை பரீட்சிப்பவர்களுக்கு புள்ளி வழங்குதல் தாமதம் அடைந்தமை இதற்கு காரணமாக இருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 50,263,302 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 41,801,341 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,461,961 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு தொலைக்கல்விப் பாடநெறி வருமானம் மற்றும் ஏனைய வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்த வருமானத்தில் 39 சதவீதம் தொலைக்கல்வி பாடநெறி வருமானத்தை உள்ளடக்கி இருந்ததுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது அரசாங்கத்தின் மூலதன மானியம் 100 சதவீதத்தினாலும், அரங்கத்தின் மீண்டெழும் மானியம் 29 சதவீதத்னாலும் குறைவடைந்திருந்தது.